**செய்தி வெளியீடு எண் : 2012** **நாள் : 05.10.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்</u>**

**எம்.டி. (சித்தா) –மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான சேர்க்கை**

**2023– 2024ஆம் கல்வியாண்டு**

தமிழ்நாட்டிலுள்ள அரசு சித்தா மருத்துவக் கல்லூரிகளில் (சென்னை மற்றும் பாளையங்கோட்டை)உள்ள இடங்களுக்கு, 2023–2024ஆம் கல்வியாண்டிற்கான **எம். டி. (சித்தா) மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான சேர்க்கை** பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 2023–ஆம் ஆண்டிற்கான சித்தா மருத்துவப் பட்டப்படிப்பிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (AIAPGET 2023–Siddha) எழுதி, தேவையான தகுதி சதமான மதிப்பெண் பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை "www.tnhealth.tn.gov.in"** என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **விண்ணப்பங்கள் இவ்வாணையரகத்திலோ, தேர்வுக்குழு அலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது.** மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு **"www.tnhealth.tn.gov.in'** என்ற வலைதள முகவரியில் தெரிந்துக்கொள்ளலாம்.

- விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை **06.10.2023 முதல் 20.10.2023 முடிய மாலை 05.00 மணி வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ கடைசி நாள்: **20.10.2023 மாலை 05.30 மணி வரை.**
- விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி: **"செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை – 600 106."**

- **விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு நேர்முகமாக மட்டுமே நடைபெறும் மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே வரவேண்டும்.**
- **கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் அனைத்து விவரங்களும்** வலைதள முகவரி மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.
- **கலந்தாய்வு அன்று நேரில் வரத்தவறியவர்கள் தங்களது வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.**
- **விண்ணப்பக் கட்டணம்: 3000/- ரூபாய்**
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை எஸ்.பி.ஐ. இ-சேவை வாயிலாக மட்டுமே செலுத்தவேண்டும்.
- கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, மேலும், தபால்/ கூரியர் சேவையினால் ஏற்படும் காலதாமதத்திற்கு தேர்வுக்குழு பொறுப்பாகாது.

**ஆணையர்,**

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in